காலநேரம் விரையமாகிறது. எனவே, இந்த ஆண்டு அதற்கான அறிவிப்பினை வெளியிட, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக அங்கேயிருக்கிற சில பிரச்சினைகளையும், மக்களுடைய நிலையையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதனடிப்படையில், இந்த ஆண்டு கட்டக்கூடிய துணை கருவூலங்களில், அவர் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டே அதைக் கட்டி முடிப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன். நன்றி சொல்லி, உட்காருங்கள்.

திரு. S. சந்திரன்: மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழியிலே திட்டங்களை நிறைவேற்றுவதுபோல, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

ALONE TRIUMPH

46—

பால் கொள்முதல் நிலையம்

***6768—திரு. கு. செல்வபெருந்தகை:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, படப்பை பகுதியில் புதிய பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, படப்பை பகுதியில் புதிய பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் வினா எழுப்பியிருக்கின்றார்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, படப்பை பகுதியில் சாத்தியக்கூறுகள் இருப்பின், புதிய பால் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்திலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கால்நடை கண்காட்சி நடத்தி, அங்கே கால்நடை அபிவிருத்திக்கான திட்டத்தை துவக்கி வைத்தார். அதனடிப்படையிலே, ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலும், குன்றத்தூர் வட்டத்திலும் ஏராளமான கால்நடைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. ஸ்ரீபெரும்புதூரிலே 2,150 பசு மாடுகளும், 200 எருமை மாடுகளும், மதுரமங்கலத்திலே 3,400 பசு மாடுகளும், 590 எருமை மாடுகளும், தண்டலம் பகுதியிலே 2,300 பசு மாடுகளும், 850 எருமை மாடுகளும், குன்னம் பகுதியிலே 3,420 பசு மாடுகளும், 80 எருமை மாடுகளும், ஆயக்குளத்தூர் பகுதியிலே 6,700 பசு மாடுகளும், 300 எருமை மாடுகளும், மாத்தூர் பகுதியிலே 2,460 பசு மாடுகளும், 40 எருமை மாடுகளும், படப்பைப் பகுதியிலே 6,295 பசு மாடுகளும், 850 எருமை மாடுகளும், மணிமங்கலம், சோமங்கலம், நடுவீரப்பட்டு, குன்றத்தூர், மாங்காடு போன்ற பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பசு மாடுகள் மற்றும் எருமை மாடுகள் இருக்கின்றன. ஆனால், அங்கே பால் கொள்முதல் நிலையம் இல்லாமல், மக்கள் தவித்து வருகிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிகாட்ட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, படப்பை பகுதியில் தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இல்லாத காரணத்தினால், பால் கொள்முதல் எதுவும் செய்யப்படுவது இல்லை. படப்பையிலிருந்து பாலுசெட்டிசத்திரம் பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 56 கிலோ மீட்டர் தொலைவிலும், சாலூர் பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 55 கிலோ மீட்டர் தொலைவிலும், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றம் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 46 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. இந்த நிலையில், ஒன்றிய களப் பணியாளர்கள்மூலம் தேவையான கள ஆய்வினை மேற்கொண்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 42,956 பசு மாடுகளும், 8,644 எருமை மாடுகளும் ஆக மொத்தம் 51,600 மாடுகள் இருக்கின்றன. இத்தனை மாடுகள் இருந்தால் பால் கொள்முதல் நிலையம் அமைக்கலாம் என்று பால்வளத் துறைக்கு ஏதேனும் அளவுகோல் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர், சென்னையின் புறநகரில் இருக்கின்ற காரணத்தால், பால் வரத்து முழுக்க, முழுக்க தனியார் கொள்முதல் நிலையங்களுக்குச் சென்று விடுகிறது.* Society–*க்கு வரக்கூடிய பால் மட்டும்தான் வருகிறது. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர்*

2022 மார்ச் 23]

சொல்கிற, பாலுசெட்டிசத்திரம், படப்பையில் பார்த்தீர்களென்றால், பால் உற்பத்தி குறைவாக உள்ளதோடு பாலின் தரமும் அங்கு சரியாக இல்லை. பால் இல்லாத காரணத்தால், அங்கு பால் கொள்முதலுக்கு வருவதில்லை. நீங்கள் சொன்னது போன்று, பாலை தனியார்களிடம் கொடுக்கின்ற ஆர்வம், நம்மிடம் கொடுப்பதற்கு வரவில்லை. அது நம்முடைய உற்பத்தியாளர் செய்த தவறுதான். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், மிக விரைவில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டு, மிக விரைவில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின்பேரில் பால் உற்பத்தி அதிகமாகும்போது அங்கு ஒரு சங்கம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. கு. செல்வபெருந்தகை: *நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

வீடுகள் கட்ட அனுமதி வழங்குதல்

***199—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஊழியர்கள் குடியிருக்க வாரியத்தால் வழங்கப்பட்ட இடங்களில் அவர்கள் வீடு கட்டி குடியேற அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், சேலையூர், ராஜகீழ்ப்பாக்கத்தில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான சர்வே எண் 39/1–க்கு உட்பட்ட, 12 ஏக்கர் 80 சென்ட் நிலத்தில் முதல்கட்டமாக 2,400 சதுர அடி வீதம் 120